திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே..

திரு. நா. சுந்தரராஜ் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயிண்ட் ஆப் ஆர்டர். எந்த விதியின் கீழ் அதை எழுதிக் கொடுக்க முடியுமோ அந்த விதியின் கீழ் அதை எழுதிக் கொடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தேவையில்லாத விவகாரங்களை உண்டாக்கப் பார்க்கிறீர்கள்.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, மதுக்கரை கிராமத்தில் புதிதாகப் போடப்படும் தேசிய நெடுஞ்சாலைக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் இதுவரை 59.92 ஏக்கர் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலம் அரசுப் புறம்போக்காக இருந்த நிலம். அதை தனியார் பட்டா பெற்று அரசாங்கத்திற்கு விற்று இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

திரு. ப. கோ. கிட்டு : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் சொல்வதைப் பற்றிய குற்றச்சாட்டு அரசுக்கு வரவில்லை. அதைப் பற்றி அவர்கள் குறிப்பு எழுதி அனுப்புவார்களானால் அது பற்றி பரிசீலிக்கப்படும். மேற்படி சொல்லிய வேலைகளுக்கான பணத்தை 1979 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவதற்குள்ளாக அவர்களுக்குக் கொடுக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதே சட்டமன்றத்தில் நான் பேசுகிற போது இந்தப் புகார் பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அதைப் போலவே கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் கொடுத்து இருக்கிறேன். எனவே அதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அதைப் பரிசீலிக்கலாம்.

Coffee Plantation Corporation.

*Q. No. 555. THIRU S. GANESAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a coffee plantation corporation in the State; and

(*b*) if so, the details thereof?

1979 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்திய காப்பி போர்டு போன்று மாநில மட்டத்தில் தமிழ் நாடு அரசு காப்பி போர்டு நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்திய காப்பி போர்டு நிறுவனம் போன்று ஒன்றை தமிழ்நாடு அரசு அமைக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் காப்பி வளர்ச்சிக் கழகம் என்கிற ஒரு அமைப்பை ஏற்படுத்துவது குறித்து இந்த அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய காப்பி போர்டுக்கு தமிழ் நாட்டில் இருந்து சில பிரதிநிதிகளை நாம் அனுப்பியிருக்கிறோம்; இந்த அரசாங்கத்தின் மூலமாக அதை எந்த அடிப்படையில் அனுப்பி இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. நம்முடைய மாநிலத்தில் காப்பி பயிரிடக்கூடிய பரப்பளவில் அடிப்படையில் பிரதிநிதிகளை அனுப்புகிறீர்களா அல்லது ஏதோ நமக்கு இரண்டு பேர், 3 பேர் என்ற அளவில் இடம் கொடுத்து இருக்கிறார்கள் என்கிற அடிப்படையில் அனுப்பியிருக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்காட்டில் காப்பி வளர்க்கும் திட்டம் இருக்கிறதா ? அதைப்போல தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலையில் 5,400 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே காப்பி போடும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் காப்பி வளர்ச்சியோடு ஈடுபட்டுள்ள கூட்டு நிறுவனம் அல்லது அரசின் கட்டுப்பாட்டிற்குள் வரும் நிறுவனம் ஆகியவற்றின் வழியாக ஏறத்தாழ 4,000 ஏக்கர் நிலத்தில் கொல்லி மலையிலும், ஆனை மலையிலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியிலும், சிறுமலை, மற்றும் சிங்கம்பட்டி ஆகிய இடங்களிலும் காப்பி வளர்ப்புக் கழகத்தின் மூலமாக காப்பி வளர்க்கும் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மொத்தம் தமிழ் நாட்டில் எத்தனை ஏக்கரில் காப்பி பயிரிடுகிறார்கள்? இரண்டாவதாக, பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் அந்தக் காப்பி போர்டில் இருக்கிறார்கள், தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே உறுப்பினர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒன்று, ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். இரண்டு, தனிக்கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற வினாக்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10—00.]

2. உரிமைப் பிரச்னைகள்.

(அ) உணவுத் துறை அமைச்சர் மீது.—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று (26—3—79) திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். அதற்கு 27—3—77 அன்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய விளக்கத்தை அளிப்பார்கள்.

*மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவரவர்களே, 20—3—77-ந்தேதி இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரால் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது விளக்கம் கொடுக்கின்ற நேரத்தில் இந்த அவைக்கு உண்மைக்குப் புறம்பான சில தகவல்களை வேண்டுமென்றே நான் கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் என்மீது நேற்றைய தினம் உரிமை மீறல் பிரச்சனை ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்கு நான் இந்த அவையிலே விளக்கம் சொல்ல கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.